සියලුම හිමිකම් ඇවිරිණි
All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2019

## புவியியல் - භූගෝල විද්‍යාව

தரம் : **6** நேரம்: 2 மணித்தியாலம்

| பெயர் /சுட்டெண்: |
|---|

**பகுதி** I

♦ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

♦ இலக்கம் 1-5 வரையிலான வினாக்களுக்குப் பொருத்தமான சொற்களை அடைப்பினுள்ளிருந்து தெரிவு செய்து இடைவெளி நிரப்புக.

1. இலங்கையின் வடமாகாணம் ................................ மாவட்டங்களைக் கொண்டது.
(3,5,4)

2. வளிக்கோளத்தில் காணப்படும் வாயுக்களிள் தாவர வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமான வாயு ................................ வாயுவாகும்.
(ஒட்சிசன், நைதரசன், காபனீரொட்சைட்டு)

3. இலங்கைக்கு இடம்பெயர்ந்து வரும் பறவைகளில் ................................... யும் ஒரு பறவையாகும்.
(வெளவால், காகம், சிட்டுக்குருவி)

4. இலங்கையின் சமதரையான பகுதிகளில் ...................................... பயிர்ச் செய்கை இடம்பெறுகின்றது.
(தேயிலை, தென்னை, இறப்பர்)

5. வீட்டின் அயற்சூழலிலுள்ள மரத்தை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் கைத்தொழில் ................................... கைத்தொழிலாகும்.
(பாரிய, சிறியஅளவிலான, குடிசை)

♦ இலக்கம் 6-10 வரையுள்ள வினாக்களில் கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✕) எனவும் அடைப்புக்குள் இடுக.

6. போக்குவரத்தின் போது பருவகால சீட்டுக்கள் அரசாங்கத்தால் இலவசமாக வழங்கப்படுகின்றது. ( )

7. சித்திரத்தை விட திட்டப்படமொன்றில் புவியியல் அம்சங்கள் அமைவு பெற்றுள்ள தூரத்தை துள்ளியமாக அறியலாம். ( )

8. நீராவியானது ஒடுங்கல் நிலையை அடைந்து மழையாக பூமியை நோக்கி வரும். ( )

9. காலநிலைத் தரவுகளை பெற்றுக் கொள்ளல் பாடசாலை மாணவர்களுக்கு மிக முக்கியமானதாகும். ( )

10. மேற்குக்கும் வடக்கிற்கும் இடையில் வடகிழக்குத் திசை காணப்படுகின்றது. ( )

- இலக்கம் 11-15 வரையிலான வினாக்களுக்கு பொருத்தமான விடையை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

11. இலங்கையின் மாகாணங்களுள் கரையோரத்தை சார்ந்திராத மாகாணம் பின்வருவனவற்றுள் எது?
    1) வடமாகாணம் 2) வடமேல் மாகாணம்
    3) சப்ரகமுவ மாகாணம் 4) மேல் மாகாணம்

12. இலங்கையின் தென்மாகாணத்திற்கு சொந்தமான இயற்கைத் துறைமுகம் பின்வருவனவற்றுள் எது?
    1) அம்பாந்தோட்டை 2) திருகோணமலை
    3) காலி 4) கொழும்பு

13. தாவரங்களால் சூழலுக்கு கிடைக்கும் நன்மை யாது?
    1) எரிபொருள்களை வழங்குதல்
    2) உணவு மற்றும் மருந்துவகைகளை பெற்றுக் கொடுத்தல்
    3) வளிமண்டலத்தை தூய்மையாக்கல்
    4) கட்டங்களை கட்டுவதற்கான மரங்களை வழங்குதல்

14. பாடசாலையொன்றின் அடையாளத்தினை குறித்துக்காட்டுவதற்கு இது அவசியமில்லை
    1) பாடசாலையின் பெயர் 2) பாடசாலை அமைந்துள்ள தேர்தல் பிரிவு
    3) கல்வி வலயம் 4) கல்விப் பிரிவு

15. திட்டப்படமொன்றில் காணமுடியாத அம்சம் ஒன்று
    1) முப்பரிமானமாக இருத்தல் 2) அழகாக இருத்தல்
    3) குறியீடுகளை காட்டுதல் 4) திசையை காட்டுதல்

- **இல 16 முதல் 20 வரையான வினாக்களுக்கு பொருத்தமான விடையை எழுதி இடைவெளியை நிரப்புக**

16. பிள்ளைக்கு பொருத்தமான கல்வியை வழங்குவது ...................................... ஆகும்.

17. இலங்கையின் காலநிலை அவதான நிலையம் கொழும்பு ......................... இல் அமைந்துள்ளது.

18. வானத்தில் முகில்கள் இல்லாத வேலை தெளிவான ............................... வானத்தை காணலாம்.

19. எமக்கு வெப்பத்தையும், வெளிச்சத்தையும் வழங்குவது ................................. ஆகும்.

20. பிளேக் நோயை பரப்புவது ...................................... ஆகும்.

(20 X 2 = 40)

kalvi.lk


# புவியியல் - භූගෝල විද්‍යාව

தரம் : **6**

பகுதி II

♦ **முதலாம் வினாவுக்கும் வேறு நான்கு வினாக்களுக்கும் விடையளிக்குக.**

1. (அ) தரப்பட்டுள்ள இலங்கைப்படத்தை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.





1) உமது பாடசாலை அமைந்துள்ள மாவட்டத்தை காட்டும் ஆங்கில எழுத்து எது? (2 புள்ளி)
2) இலங்கையின் மிகப் பெரிய, மற்றும் மிகச்சிறிய மாவட்டங்களை காட்டும் ஆங்கில எழுத்தை முறையாக எழுதுக. (2 புள்ளி)
3) கிழக்கு மாகாணத்தை சேர்ந்த மாவட்டங்களில் F எழுத்தால் காட்டப்படும் மாவட்டம் எது? (2 புள்ளி)
4) இலங்கையிலுள்ள மாகாணங்களில் கரையோரத்தை சார்ந்துள்ள மாகாணங்கள் இரண்டை குறிப்பிடுக. (2 புள்ளி)
5) இரண்டு மாவட்டங்களை மட்டும் கொண்ட மாகாணம் எது? (2 புள்ளி)

(ஆ) கீழே காட்டப்படும் நிர்வாக படிமுறைகளை இடைவெளியில் எழுதுக. (6 புள்ளி)

பாடசாலை → 1.............. → 2.......... → மாவட்டம் → 3...........

2. கீழே காணப்படும் வானிலையை அளவிடும் கருவிகள் தொடர்பான தகவல்களை பயன்படுத்தி கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.




x




y



z

1) X எழுத்தால் காட்டப்படும் உபகரணம் யாது? (2 புள்ளி)
2) Y எழுத்தால் காட்டப்பட்ட உபகரணத்தால் அளவிடப்படும் வானிலை மூலகம் எது? (2 புள்ளி)
3) Z எழுத்தால் காட்டப்படும் உபகரணத்தை பெயரிட்டு அதனால் அளவிடுப்படும் வானிலை மூலகத்தையும் குறிப்பிடுக. (4 புள்ளி)
4) X,Y,Z உபகரணங்களால் அளவிடப்படும் வானிலை மூலகங்களின் அலகுகளை முறையாக குறிப்பிடுக. (3 புள்ளி)

X - ..............................
Y - ..............................
Z - ..............................


3. 1) மனிதனால் நிலம் முறையற்ற வித்தில் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் இரண்டை குறிப்பிடுக. (4 புள்ளி)

2) அடைப்புக்குள் தரப்பட்டுள்ள சொற்களை பயன்படுத்தி கீழ் வரும் அட்டவணையை பூரணப்படுத்துக.

மழை நீர், நீரை சிக்கனமாக பயன்படுத்தல், மண், மரங்களை நடல், காடழிப்பு, மண்ணரிப்பு, காடுகள், விவசாய நடவடிக்கைகள பாதிப்படைதல், காடழித்தல், மழை நீர்தாங்கிகளை பயன்படுத்தல்.

| இயற்கை சூழலின் கூறுகள் | முறையற்ற மனித நடவடிக்கைகள் | இந் நடவடிக்கையின் விளைவுகள் | மாசுபடுதல்/பாதிப்புகளை குறைக்க எடுக்கும் நடவடிக்கைகள் |
|---|---|---|---|
| 1................ | நீரை வீண்விரயமாக்கல் | 4.................... | 6................ |
| 2............... | 3................... | 5................... | 7................ |

4. 1) பாரம்பரிய தொழிநுட்பத்திறன்களை அடிப்படையாக் கொண்ட கைத்தொழில்கள் அமையப்பெற்றுள்ள பின்வரும் இலங்கைப்படத்தினை பயன்படுதி இடைவெளிகளை நிரப்புக.





(8 புள்ளி)

2) பின்வரும் பிரதேசங்களில் பயிரிடப்படும் பயிர் வகைகள் ஒவ்வொன்றை குறிப்பிடுக.
சமவெளிப் பிரதேசம் - ................................
மலைப் பிரதேசம் - .....................................
நதிக்கரைப் பிரதேசம் - .............................. (3 புள்ளி)

5. 1) கீழே A,B,C,D இனால் காட்டப்படும் சமய ஸ்தலங்களை இனங்கண்டு பெயரிடுக.


A


B


C


D

(4 புள்ளி)

2) இந்த சமய ஸ்தலங்களில் மக்கள் பின்பற்றும் சமயங்களை ஒழுங்கு முறைப்படி குறிப்பிடுக.
A - ...............................
B - ...............................
C - ...............................
D - ............................... (4 புள்ளி)

3) இந்த சமயங்களில் பின்பற்றப்படும் சமய கொண்டாட்டங்கள் ஒவ்வொன்றை குறிப்பிடுக.
(3 புள்ளி)

6. 1) கீழே காணப்படும் புவியியல் அம்சங்களை சரியாக இணைக்குக.

| | |
|---|---|
| | உயர்நிலம் |
| மனிதனால் உருவாக்கப்பட்ட அம்சம் | பூங்காக்கள் |
| | வீதி |
| | காடு |
| இயற்கை அம்சம் | நதி |
| | பயிர்வகைகள் |

(6 புள்ளி)

2) பின்வரும் மிருகங்களால் கிடைக்கும் நன்மைகள் ஒவ்வொன்றை எழுதுக.

| | | |
|---|---|---|
| செண்பகம் | : | ................................. |
| கறையான் | : | ................................. |
| காகம் | : | ................................. |
| மண்புழு | : | ................................. |
| கிளி | : | ................................. |

(5 புள்ளி)

kalvi.lk

7. தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை பயன்படுத்தி பின்வரும் குறுக் கெழுத்து சட்டகத்தை நிரப்புக

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 அ | | | ல | | 7 | ட |
| | | | | | | |
| | | | | 2 | | பு |
| றை | | | | | பு | |
| | 3 உ | | 8 பு | | | 11 தி |
| | | | | | | |
| 9 | | | 4 | | ளை | |
| க | | | | | | |
| | | 5 து | | 11 | றை | |
| | | | | | | |
| | | | | | | |

**இடமிருந்து வலம்**

1) முகமூடிக் கைத்தொழிலுக்கு பிரசித்தி பெற்ற இடம்
2) விஷஜந்துக்களில் ஒன்று
3) கடற்கரையோரத்தில் விளையும் அத்தியாவசிமான மூலப் பொருள்
4) வானிலையை எதிர்வு கூறுவது
5) பாய்கள் உற்பத்திக்கு பிரசித்தி பெற்ற இடம்

**மேலிருந்து கீழ்**

1) கிழக்கு மாகாணத்தின் மாவட்டம் ஒன்று
5) நெல்வயல்களை நாசம் செய்யும் பூச்சியினங்களை அழிக்கும்
7) இலங்கையின் தலைநகரம் அமைந்துள்ள மாவட்டம்
8) வடமேல் மாகாணத்திலுள்ள மாவட்டம் ஒன்று
9) கழிவுப் பொருட்களை உண்ணும்
11) திட்டப் படமொன்றை வரையும் போது இதனை குறிப்பிடுதல் முக்கியமானதாகும்.

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by

**Pathmanathan Pathmaraj**

(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**

**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page